17/10/2024.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. 20/2019**

அ.சா.**15**

பெயர். திரு.தமிழரசன்

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி.**

இனோவா சில்வர் கலர் வாகன பதிவு எண். டி.என்.07BP3994 எங்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டது. அதை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிக்கொண்டார்கள். நானும், எனது கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்ப்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆகும். என்னிடம் காண்பிக்கபடுவது அந்த காரின் புகைப்படங்கள் என்றால் சரிதான். (மேற்படி கார் இடைக்கால பொறுப்பில் அதன் உரிமையாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. அப்போது அவர் காரின் புகைப்படங்களை எடுத்து புகைப்படங்கள் மற்றும் சி.டியை நீதிமன்றத்திற்கு ஆஜர் செய்தார். எனினும் காரை ஆஜர் செய்ய அறிவிப்பு அனுப்பியும் கார் ஆஜர் செய்யப்படவில்லை. அது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.) அந்த புகைப்படங்கள் (எண்ணிக்கை 3 ) சா.பொ. 3 ஆகும். அந்த கார் தொடர்பான சி.டி. சா.பொ.4 ஆகும். மேற்படி சி.டி. எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.

மோகன் கொடுத்த தகவலின் பேரில் எடைப்பாளையம் பேருந்து நிலையத்தில் இருந்த ரவி மற்றும் செல்வம் இருவரை காவல் துறையினர் 22.08.2018ந் தேதியில் எங்கள் முன்பு விசாரணை செய்தனர். ரவி என்பவர் தனது வாக்குமூலத்தை எங்கள் முன்பு கொடுத்தார். அதை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார்கள். அதில் அப்தூல் ஜாபர் என்பவரை கொலை செய்ததற்கான காரணத்தை தெரிவித்தார். அதன் பிறகு அதற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும், பதிவு எண்.TN32AL9063 பல்சர் வாகனம், கத்தியையும் எங்கள் முன்பு ஆஜர் செய்தார். அதை கைப்பற்றுதல் மகசரில் பதிவு செய்தார். அதில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ரவியின் ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகும். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN32AL9063 பல்சர் வாகனம் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகும். (அந்த இருசக்கர வாகனம் இடைக்கால பொறுப்பில் 2ம் எதிரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது). என்னிடம் காட்டப்படும் அந்த மோட்டார் சைக்கிளின் புகைப்படங்கள் 3 எண்ணிக்கை சா.பொ. 5 ஆகும். என்னால் அந்த கத்தியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி அந்த கூர்முனையுள்ள கத்தியை அடையாளம் காட்டினார். அது சா.பொ. 6 ஆகும்.

அதன் பிறகு எதிரி செல்வம் என்பவரிடம் காவல் துறையினர் விசாரணை செய்த போது மோகன் என்பவரிடம் வாகன ஓட்டுனராக தான் பணியாற்றி வருவதாகவும், சம்பவதன்று தான் வாகனத்தை ஓட்டியதாகவும் தெரிவித்தார். மோகன் என்பவர் காவல் நிலையத்தில் ஆஜரான விவரம் தெரிந்ததால் வெளியூர் செல்வதற்காக எடைப்பாளையம் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது காவல் துறையினர் தன்னிடம் வாக்குமூலம் பெற்றதாக தெரிவித்தார். அந்த வாக்குமூலத்தில் நானும், எனது கிராம உதவி யாளரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.7 ஆகும்.

அதன் பிறகு 31.08.2018ம் தேதி திருவெண்ணைய்நல்லூர் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு அழைத்ததன் பேரில் நானும், எனது கிராம உதவியாளரும் சுமார் 6 மணியளவில் காவல் நிலையம் சென்றோம். அப்போது எங்கள் முன்பு திலிப் என்கிற திலிப்குமார் என்பவரிடம் வாக்குமூலம் பெற்றனர். அவர் தான் வெளியூரில் வசித்து வருவதாகவும், தனது உறவினரான மோகன் என்பவரின் வீட்டிற்கு சம்பவத்தன்று வந்ததாக தெரிவித்தார். *(மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை குறித்து சாட்சியை ஆட்சேபிக்கப்பட்டது).* அப்துல் ஜபார் என்பவரை கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை தன்னை அழைத்து சென்றால் தங்கள் முன்பு ஆஜர் செய்வதாக ஆய்வாளரிடம் தெரிவித்தார். அதன் பின்பு சம்பவ இடம் சென்றோம். அப்போது தான் மறைத்து வைத்திருந்த கறி வெட்டும் கத்தியை எங்கள் முன்பு எடுத்து ஆஜர் செய்தார். அதை கைபற்றுதல் மகசரில் ஆய்வாளர்

கைபற்றிக்கொண்டார். அதில் நானும், எனது கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆகும். அந்த கறி வெட்டும் கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அந்த கத்தி சா.பொ.7 ஆகும். அதன் பிறகு காவல் நிலையம் சென்றோம். இது குறித்து என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கிராம நிர்வாக அதிகாரியாக பயிற்சி பெற்றுள்ளேன். எப்படி பணியாற்ற வேண்டும் என்றும் எனக்கு பயிற்சி கொடுத்தார்கள். எனக்கு கொடுத்துள்ள கிராம நிர்வாக அலுவலரின் பணி குறித்து வழிகாட்டுதலில் 22 வகையான வழிகாட்டுதல்களை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 22.08.2018ம் தேதி நான் செய்த பணிகள் சம்மந்தமாக நாட்குறிப்பு எழுதிவைத்து வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பினேனா என்றால் இல்லை. 22.08.2018ந் தேதி என்னை காவல் நிலையத்தில் தொலைபேசியில் அழைத்தார்கள் என்பதை நான் எனது நாட்குறிப்பில் பதிவு செய்தேனா என்றால் செய்யவில்லை. 22.08.2018ந் தேதி நான் காவல் நிலையத்திற்கு செல்லும் போது எனது அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் இந்த பணிக்காக தான் செல்கிறேன் என்று எழுதிவைத்துவிட்டு சென்றேனா என்றால் இல்லை. பணி முடித்துவிட்டு திரும்பி நான் வந்த விவரத்தை அந்த பலகையில் எழுதி வைத்தேனா என்றால் இல்லை. எனது அலுவலகத்திலிருந்து திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 12 கி.மீ தூரத்தில் உள்ளது. நானும் எனது உதவியாளரும் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திற்கு எப்படி சென்றோம் என்றால் இருசக்கர வசாகத்தில் சென்றோம். நான் சென்ற வாகனத்தின் பதிவு எண் சொல்ல முடியுமா என்றால் TN29BH6924 ஆகும். அந்த வாகனத்தை பயன்படுத்திய சம்மந்தமாக நான் எனது துறையில் பயணப்படி எதாவது கோரினேனா என்றால் இல்லை. திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் என்பது மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மோகன் என்பவர் வாக்குமூலம் அளிக்கும்போது அதை பதிவு செய்வதற்காக ஆய்வாளர் அங்குள்ள தனிப்பட்ட நபர்களை கூப்பிட்டாரா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் மோகனை ஆய்வு செய்து அவரது

உடலிலிருந்தோ அல்லது ஆடைகளிலிருந்தோ பேக்கெட்டிலிலிருந்தோ எதாவது பொருளை கைபற்றினாரா என்றால் இல்லை. மோகன் அன்று அணிந்திருந்த உடை என்ன சட்டை, என்ன கலர் சட்டை என்று என்று என்னால் கூற இயலாது. என்ன வகையான உடை உடுத்தியிருந்தார் வேட்டியா அல்லது பேண்டா என்று என்னால் கூற இயலாது. வாக்குமூலத்தை ஆய்வாளர் தன் கைப்பட எழுதினார் என்றால் இல்லை. வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்று குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. காவல் ஆய்வாளர் திரு. ஜோகிந்தர் என்பவர் எழுதினார். இனோவா வாகனம் எங்கிருந்து கைபற்றப்பட்டது என்றால் மோகன் வீட்டின் முன்பு இருந்து கைபற்றப்பட்டது. அந்த வண்டியின் பதிவு சான்று, காப்பீட்டு சான்று, ஓட்டுனர் உரிமம் எதாவது எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அந்த கத்தியில் குறிப்பிட்ட வகையான அடையாளம் எதாவது இருந்ததா என்றால் தெரியவில்லை. அந்த சாம்சங் செல்போனின் ஐ.எம்.இ.ஐ.எண். என்ன என்று எனக்கு தெரியாது. அந்த சாம்சங் செல்போனில் எத்தனை சிம்கார்டுகள் போடப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. அந்த சாம்சங் செல்போனை ஆய்வாளர் ஆய்வு செய்து பார்த்தாரா என்றால் வாங்கி பார்த்தார் அது அனைக்கப்பட்ட நிலையில் இருந்தது. சாம்சங் செல்போன் மற்றும் கத்தியை ஒரே கவரில் சீல் செய்தார்களா அல்லது தனித்தனியான கவரில் சீல் செய்தார்களா என்றால் தனித்தனியாக சீல் செய்தார்கள். அந்த இனோவா வண்டியை எப்படி யார் கொண்டு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மோகன் வீட்டின் கதவு எண். எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட மகசரில் கதவு எண். இருந்ததா என்று எனக்கு சரியாக நினைவில்லை. அன்று காவல் துறையினர் மோகன் வீட்டிற்கு சென்ற போது அதிலிருந்த ஓட்டுனர் யார் என்றோ, வண்டி எண். என்ன என்றோ என்னால் கூற இயலாது. எடைப்பாளையம் பேருந்து நிலையம் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 14 கி.மீ தொலைவில் உள்ளது. டி.எடைப்பாளையம் பகுதியும் மக்கள் வசிக்கும் பகுதி கடைகள் நிரம்பிய பகுதி என்றால் ஆமாம். அந்த எடைப்பாளையம் பகுதியில் அவரை கைது செய்வதற்கு முன்பு அவரது வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அங்குள்ள தனிப்பட்ட சாட்சிகளை ஆய்வாளர் அழைத்தாரா என்றால் இல்லை. இந்த நிகழ்வு சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்தில் ரவியை கைது செய்து கைப்பற்றிய இருசக்கர வாகனத்தின் எண்ணை குறித்து நான்

குறிப்பிடவில்லை என்றால் நான் சொன்னேன். அந்த வாக்குமூலத்தில் பதிவு செய்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. அந்த வாகனத்தின் பதிவு சான்று, காப்பீட்டு சான்று, ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை காவல் துறையினர் கைபற்றினார்களா என்றால் கைபற்றினார்கள். நான் கைபற்றப்பட்டதாக சொல்லும் கத்தியில் குறிப்பிட்ட அடையாளம் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. அதை பேக் செய்து சீல் செய்தார்களா என்றால் ஆமாம். எதில் பேக் செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் சொன்னது போல சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகள் மோகன் மற்றும் ரவியை கைது செய்து வாக்குமூலம் பெறவில்லை என்றும், ஏற்கனவே மோகன் மற்றும் ரவியை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றும், நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதாலும், அரசு ஊழியர் என்பதாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஏற்கனவே காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைபற்றுதல் மகசர்களில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த நிகழ்வும் நடக்காததால் தான் நான் இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலருக்குண்டான வழிகாட்டுதல்களை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாணையை 3ம் எதிரி தரப்பில் தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**<u>1,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>இல்லை.</u>**

**<u>5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

**இல்லை.**